[1984 மார்ச் 15

தேயிலைப் பதுக்கலைத் தடுக்கும் திட்டம்.

319—(*வினா எண். 22036): திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேயிலைப் பதுக்கலைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு தேயிலை (வணிகர் பதிவு செய்தல் மற்றும் இருப்பு அறிவித்தல்) ஆணை 1984 இன்றியமையாச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையின்படி 1000 கிலோவுக்கு மேல் தேயிலை இருப்பு வைத்துள்ளவர்கள் தங்களை தேயிலை வணிகர்களாகப் பதிவு செய்து கொண்டு, மாதமிருமுறை தங்களின் இருப்புக் கணக்குகளை குறிப்பிடப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இது பதுக்கலைத் தடுக்க வழிவகை செய்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலையைப் பதுக்குவதற்குகான மூலக்காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தேயிலையின் விலை அதிகரித்துள்ளதாகவும், அதன் காரணமாக தேயிலையின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மத்திய அரசு தெரிவித்தது. அது மட்டுமல்லாமல் உள் நாட்டில் அதிகமாக விலை ஏறுகிற சூழ்நிலையைப் பார்த்து நம்முடைய தேவைகளை மனதில் வைத்து ஏற்றுமதியையும் மத்திய அரசு தடை செய்துள்ளது. இந்த நடவடிக்கைகளின் காரணமாக ஏலம் நடக்கும் இடங்களில் தேயிலை விலை குறைந்து காணப்படுகிறது என்றும், கல்கத்தா ஏலங்களில் கிலோவிற்கு ரூபாய் 7-லிருந்து 8 வரையும், கொச்சின் ஏலங்களில் ரூபாய் 4-லிருந்து 5 வரையும் குறைந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆகவே இதன் காரணமாக அப்படிப்பட்ட ஏலங்களில் விலை குறைந்திருப்பதன் காரணமாக சிறு வியாபாரிகளிடத்தில் விலை குறைந்திருக்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தது மட்டுமல்லாமல், மைய அரசு ஒரு கிலோ சிவப்பு அல்லது மஞ்சள் லேபிள் தேயிலை மற்றும் உதிரி தேயிலையின் சில்லரை விற்பனை விலை ரூ. 30-க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்றும், அதற்காக மாநில அரசு தேயிலை வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அதற்கு முடிவு காணவேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்தி 30 ரூபாய்க்கு மேலே விற்பனை விலை

போகக் கூடாது என்று நாம் ஆணை பிறப்பித்து அதற்கும் அவர்கள் ஒப்புதல் தந்து, 4—2—1984-க்குள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நாம் அவர்களிடத்தில் சொல்லி இருக்கிறோம். ஆகவே ஆயிரம் கிலோவிற்கு மேலே வைத்திருப்பவர்கள் தங்கள் இருப்புகளைத் தெரிவித்தால் தான் சட்டப்படி அவைகளைக் கணக்கிட முடியும். ஆகவே சேமித்து வைத்து விலையை ஏற்றுவதற்கு வழி செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்குத் தான் அந்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது. ஓரளவிற்கு அகில இந்திய அளவிலே தேயிலையினுடைய விலை கூடாமல் இருப்பதற்கு, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மத்திய அரசு வற்புறுத்தியதன் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை பயிரிடப்படும் போதே ஒரு குத்து மதிப்பாக கணக்குப்போட்டு அதற்கு முன்பணம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? தேயிலை மூலம் அன்னியச் செலாவணி நமக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. முன் பணம் கொடுக்க இயலுமா என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் தர இயலும்.

எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் திட்டம்.

328—(*வினா எண். 18807)— திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ): திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. எண்டியூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம், கிடங்கு கட்ட அடிமனை வாங்கியபின், கிடங்கு கட்ட பிரேரணை அனுப்பினால் அதுபற்றி பரிசீலிக்கப் படும்.